**கருப்பொருள்** - புதுவாழ்வு

1. செப வழிபாட்டிற்கு பொருத்தமான இடத்தை தேர்ந்தெடுத்தல்.
2. அலங்கரிக்கப்பட்ட இடத்தில் ஸ்தாபகரின் திருவுருவத்தை வைத்து ஒளியேற்றல்.

**அடையாளப்பொருட்கள்**

1. பூவின் மொட்டு, விரிந்த மலர் இவை போன்ற வேறு அடையாளங்களையும் பயன்படுத்த முடியும்.

**முன்னுரை** – பிறப்பு என்பது ஓர் புதுவாழ்வு. நல்ல பிதாவின் பிறப்பு அவரின் குடும்பத்திற்கும், அன்றைய சமுதாயத்திற்கும், திருச்சபைக்கும், முழு உலகிற்கும் புதுவாழ்வு அளித்தது.

குவிந்திருந்த மொட்டு விரிந்து மலருகின்ற போது புதுப்படைப்பாகி அனைவருக்கும் எவ்வித வேறுபாடு, பாகுபாடும் இன்றி மலராக மணம் வீசுகின்றது.

திருக்குடும்ப அழைப்பைப் பெற்ற நாமும் இவ்வாறான வாழ்விற்கு அழைக்கப்படுகின்றோம்.

இன்று எம் ஸ்தாபகர் நாம் புதுவாழ்வு பெற்று படைப்பனைத்திற்கும், மனித குலத்திற்கும் புத்துயிர் அளிப்பவர்களாக வாழ அழைப்பு விடுக்கின்றார்.

இரக்கத்தின் ஆண்டாகிய இவ்வாண்டிலே மனமாற்றம் பெற்றவர்களாக இறை இரக்கத்தை அனுபவித்தவர்களாக பூமித்தாயோடும், முழு மனித குலத்தோடும் பகிர்ந்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம். (மேற் குறிப்பிட்ட கருத்துக்கள் உள்ளடக்கியதாக முன்னுரை அமையலாம்)

புகழ்ச்சிப் பாடல் - (பொருத்தமான புகழ்ச்சிப் பாடல்)

இன்றைய காலத்திற்கும் தேவைக்கும் பதில் கொடுக்கக் கூடிய நிறுவுனரின் சிந்தனைகள், வாழ்க்கை அனுபவங்களை சிந்தனைகளுக்குக் கொடுத்தல்.

சங்கீதம் - 103

ஒழுங்கப்புத்தக இலக்கம் - 143

(வாழ்வோடு ஒட்டிய சிந்தனைகளை வழிபாட்டை நெறிப்படுத்துபவர் பகிர்ந்து கொள்ளலாம்)

பொருத்தமான பாடல்

வாசகம் - உரோமையர் 12:1-2
மன்றாட்டு
முடிவுச்செபம்
பாடல் - We remember our dear founder Holy Family antham